59011
V2/527

ந.க.எண்.வி2/7617/168/2016

காவல் ஆணையர் அலுவலகம்,
மதுரை மாநகர், மதுரை.

25 OCT 2016

நாள். 22.10.2016

**நிரந்திர பட்டாசுக்கடை உரிமத்தை நீட்டிக்க மறுக்க விளக்கம் கோரும் அறிவிப்பு**

காவல் ஆணையர் அலுவலகம் 25 OCT 2016 மதுரை மாநகர்

பொருள் :- காவல் - மதுரை மாநகர் - வெடிபொருள் சட்டம் மற்றும் விதிகளும் படி – கதவு எண்.36, சுவாமி சன்னதி தெரு, மதுரை என்ற முகவரியில் நிரந்தர பட்டாசு சில்லரை விற்பனைக் கடைக்கான உரிமத்தை நீட்டிக்க மறுக்க விளக்கம் கோரும் அறிவிப்பு – தொடர்பாக.

பார்வை :- தங்களது விண்ணப்பம் நாள் 08.02.2016.

*****

திரு.A.L.ரகுராம் என்பவர் கதவு எண். 36, சுவாமி சன்னதி தெரு, மதுரை, என்ற முகவரியில் நிரந்தர பட்டாசு சில்லரை விற்பனைக்கடைக்கான காவல் உரிமம் வி2(3)/எக்ஸ்ப்ளோ.சி.04/96, 2016-2017ஆம் ஆண்டிற்கு புதுப்பிக்கக் கோரி விண்ணபத்துள்ளீர்கள்.

2. தங்களது நிரந்தர பட்டாசுக் கடை உரிமத்தை புதுப்பிப்பது தொடர்பாக, காவல் துணை ஆணையர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) அவர்கள் ஆய்வு செய்ததில் தங்களது கடையில் கீழ்க்கண்ட குறைபாடுகள் வெடிபொருட்கள் சட்டப்பிரிவுகள், விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு விரோதமாக செயல்படுவதாக கண்டறியப்பட்டது.

(a) A partial portion has been made in the entry and one half shown as exit/emergency.

(b) The door is shutter type.

(c) Main switch is well inside the shop.

(d) Few loose wires are there.

(e) Both the sheds for possession and sale are same.

(f) The stock register was last updated on 28.09.16.

3. மேற்கண்ட குறைபாடுகள் தவிர்த்து தங்களது பட்டாசுக்கடை நகரின் இருதயப்பகுதியில், மக்கள் அதிகமாக கூடும் இடத்தில் அமைந்துள்ளதால், பொதுமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தில்

...pto

கண்டுள்ள ஷரத்துகள் மற்றும் நிபந்தனைகளுக்கு விரோதமாகவும் செயல்படுவதால், ஏன் தங்களது நிரந்தர உரிமகாலத்தை நீட்டிக்க மறுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தை இந்த அறிவிப்பு கிடைத்த ஒரு வாரத்திற்குள் தெரிவிக்கும்படி கோரப்படுகிறீர். குறிப்பிட்ட காலத்திற்குள் விளக்கம் ஏதும் பெறப்படவில்லையெனில் தங்களுக்கு விளக்கம் அளிக்க ஏதும் இல்லையென தீர்மானம் செய்து வெடிபொருட்கள் சட்டவிதிகளுக்குட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஓம்.) சைலேஷ் குமார் யாதவ்,
காவல் ஆணையர்,
மதுரை மாநகர்.

பெறுநர்

திரு.**A.L.**ரகுராம்,
கதவு எண். 36, சுவாமி சன்னதி தெரு, மதுரை. (இரட்டை நகலில்)
(காவல் உதவி ஆணையர், நகர் (ச.ஒ) சரகம், மதுரை மாநகர் மூலமாக ஒன்றினை சார்பு செய்து ஏற்பளிப்பு செய்த நகலினை 3 தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். மேலும் இந்த விளக்கம் கோரும் அறிக்கையை உரிமம்தாராருக்கு சார்பு செய்யப்பட்ட நாள் முதல் உரிமம்தாரரை பட்டாசு விற்பனை செய்ய அனுமதிக்க கூடாது என்பதை இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.)

நகல் : காவல் துணை ஆணையர், (ச.ஒ). மதுரை மாநகர் மதுரை.
காவல் உதவி ஆணையர், நகர் (ச.ஒ) சரகம். மதுரை மாநகர் மதுரை.

/உண்மை நகல்/ஆணைப்படி/

22/X/16

காவல் துணை ஆணையர்,
(தலைமையிடம்) மதுரை மாநகர்.

22/10/16

Received a copy.

23/10/16
10.20 PM

Sir,
Resubmitted after causing service.

24/X/16

INSPECTOR OF POLICE (L&O)
B1- VILAKKUTHOON PS
MADURAI CITY